செ.வெ.எண் : 380/2026 நாள் : 08.06.2026

**போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்த பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர். தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்த பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர். தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது,

சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் இயங்கி வரும் தன்னார்வ பயிலும் வட்டத்தில் TNPSC, TNUSRB, RRB, SSC, TRB, MRB போன்ற முகமைகளால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்த பயிற்றுநர் மதிப்பீட்டு குழு மூலமாக தகுதி மற்றும் அனுபவம் பெற்ற பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர். மேலும், பயிற்றுநர்களுக்கு அரசு விதிமுறைகளின் படி மதிப்பூதியம் வழங்கப்படும்.

எனவே, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த விருப்பமுள்ள பயிற்றுநர்கள் 15.06.2026 மாலை 5.00 மணிக்குள் சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தங்களுடைய முழு விவரத்துடன் கூடிய விண்ணப்பத்துடன் கல்விசான்றுகளின் நகலினை இணைத்து நேரில் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், விபரங்களுக்கு 0427-2401750 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

**செய்தி வெளியீடு : செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்**

Salem 24x7 PROSalem PRO Salem pro.slm PRO Salem